## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகாரசபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து அதிகாரசபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கல்லூரியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சங்கத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சங்கம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கல்லூரியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில்

குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபையின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொது மற்றும் குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் செயற்படுத்துதல் உரிய அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவுசெய்தல் மற்றும் சொத்துக்களுக்காக கணக்களிதன்மையை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தினால் பொது மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் கூடிய சொத்துக்ளுக்கு மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவுசெய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மை காணப்படும் சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியில் சீராக்கம் மற்றும் வேறுபாடுகள் காணப்பட்டால் அதுதொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுத்தல் போன்றவற்றுக்கான நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக் கொள்வதற்கு போதியளவு “முறையாக

திட்டமிடப்பட்ட” உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையொன்றை நிறுவகத்தினால் பராமரித்துக்கொள்வது அவசியமாகவுள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 1 இன் 48 ஆம் பந்தியின் பிரகாரம், இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமமொன்று மூலம் வேண்டப்படுகின்ற அல்லது அனுமதி அளிக்கப்பட்டிருக்கையில் தவிர வருமானம் மற்றும் செலவினம் ஈடுசெய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும் ரூபா 104,650 தொகையான பத்திரிகை விளம்பர செலவினம் மீளச் செலுத்தாத வைப்பு வருமானத்திற்கு எதிராக ஈடுசெய்யப்பட்டு நிதிக்கூற்றுககளில் காண்பிக்கப் பட்டிருந்தது. | தற்போது இவ்விடயம் தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் நியமத்தின் பிரகாரம் செயற்படுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுப்பதாக. | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். 2020 நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது இத்தவறு திருத்தம் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் 47 ஆம் பந்தியின் பிரகாரம் போதியளவான முன்னைய காலப்பகுதியின் தவறுகளை கண்டறிந்ததன் பின்னர் விநியோகிக்கப்படுவதற்காக அங்கீகரிக்கப்பட்ட முதலாவது நிதிக்கூற்றுத் தொகுதியில், தவறு ஏற்பட்ட காலப்பகுதிக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பீட்டு ரீதியான பெறுமதியை மீண்டும் வெளியிடுதல் பின்னோக்கிய ரீதியில் சீராக்கப்பட வேண்டிய போதிலும் 2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆண்டு வரையான காலப்பகுதியில் உலக சுகாதார அமைப்பிலிருந்தும் செயற்திட்டத்திலிருந்து அதிகாரசபைக்கு கிடைத்திருந்த ரூபா 32.88 மில்லியன் மற்றும் அதலிருந்து செலவிடப்பட்டிருந்த ரூபா24.65 மில்லியன் அவ்வாண்டுகளிலே கணக்கீடு செய்யப்படாத தவறை பின்னோக்கிய ரீதியில் சீராக்கப்படாதிருந்ததுடன் அதற்குப்பதிலாக திரட்டிய இலாபத்திற்கு சீராக்கப்பட்டு மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் | எதிர்காலத்தில் நியமத்தின் பிரகாரம் செயற்படுத்தவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். 2020 நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது இத்தவறு திருத்தம் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தயாரிக்கப்பட்டிருந்தன. மேலும் முன்னைய ஆண்டின் வருமானமாக இனங்காணப்பட வேண்டியிருந்த ரூபா 129,323 தொகை 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்கொடுத்தோராக இனங்காணப்பட்ட தவறை மீளாய்வாண்டின் போது ஒப்பீட்டு ரீதியாக பெறுமதிகள் மீண்டும் பதிவுசெய்து சீராக்கப் பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 14 இன் பிரகாரம் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் தொடர்புடைய தரப்பினர்களுடன் மேற்கொள்கின்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆய்டின் போது நியமனம் செய்யப்பட்ட பணிப்பாளர் சபையினரிடமிருந்து இத்தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்காலத்தில் தயாரிக்கப்படும் நிதிக்கூற்றுக்களில் பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்கள் ஏனைய தனியார் மற்றும் அரச நிறுவனங்களில் வகிக்கும் பதவிகள் மற்றும் தொடர்புடைய தரப்பினர்களுடன் மேற்கொள்கின்ற கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான வெளிப்படுத்தப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும். | – மேற்படி - |
| (இ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமத்தின் 19 இன் பிரகாரம் ஊழியர்களின் பணிக்கொடைகளை செலுத்துவதற்காக சொத்தொன்றை ஏற்படுத்துவதற்கு ஆயுட்கால எண்ணிக்கையின் மூலம் எதிர்காலத்தில் ஊழியர்களுக்கு செலுத்துவதற்கு ஏற்படுகின்ற பணிக்கொடைகளின் தற்போதைய பெறுமதியை கணிப்பீடு செய்வதற்கும் அப்பெறுமதி சொத்துக்களின் நியாயமான பெறுமதியுடன் ஒப்பீடு செய்து ஆயுட்கால இலாபம் மற்றும் நட்டம் ஏற்படுமாயின் அப்பெறுமதியை கணக்குகளில் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பணிக்கொடைக்காக ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் ஆயுட்கால எண்ணிக்கையின் அடிப்படையில் எதிர்காலத்தில் ஊழியர்களுக்கு செலுத்துவதற்கு ஏற்படுகின்ற பணிக்கொடைகளின் தற்போதைய பெறுமதி கணிப்பிடப்பட்டு தேவையான ஏற்பாடுகளை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | – மேற்படி - |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை செலுத்த வேண்டியதாக காணப்பட்ட முன்னைய மூன்று ஆண்டுகளுக்கான ரூபா 2.48 மில்லியனான கணக்காய்வுக் கட்டணங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்படாமல் இருந்ததுடன் மீளாய்வாண்டிற்காகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2016 ஆம் ஆண்டிற்காக செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணத்தில் ஏதேனும் திருத்தங்கள் அல்லது அத்தொகையை செலுத்துவதற்கு நேர்ந்ததால் அதற்காக சலுகை காலமொன்றை பெற்றுக்கொள்வதற்கு அதிகாரசபையால் சுகாதார அமைச்சிடம் கோரப்பட்ட வேண்டுகோளின் பிரகாரம் சுகாதார அமைச்சினால் அந்த வேண்டுகோள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதால் 2016 ஆம் ஆண்டின் கணக்காய்வக் கட்டணங்கள் தொடர்பாக அல்லது அதன் பின்னரான ஆண்டுகளுக்காக கணக்காய்வுக் கட்டணங்களை அறவிடுவதற்காக கணக்காய்வினால் பட்டியல் வழங்காதிருந்தமையால் கணக்காய்வுக் கட்டணத்திற்காக ஒதுக்கீடு செய்யப்படவில்லையென | கணக்காய்வுக் கட்டணங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளுக்கு பதில் கிடைக்கும் வரை 2016 ஆம் ஆண்டின் கணக்காய்வுக் கட்டணத்திற்காக வழங்கப்பட்டுள்ள பட்டியலின் பிரகாரம் காடுப்பனவு செய்யப்பட வேண்டியதுடன் பின்னர் அடுத்த வருடங்களுக்காக 2016 ஆம் ஆண்டின் கணக்காய்வுக் கட்டணங்களை அடிப்படையாக கொண்டு நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். இது தொடர்பாக 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13(2) பிரிவு தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். 2020 ஆம் ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது இத்தவறு திருத்தம் செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 2.99 மில்லியனான மொத்த கிரகிரயமான 2018 கட்புல மற்றும் செவிப்புல வீடியோ படங்கள் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் | எதிர்வரும் காலங்களில் நிதிக்கூற்றுக்களில் கணக்காய்வினால் மேற்கொள்ளப்படும் தெரியப்படுத்தல்கள் மற்றும் | 2020 ஆம் ஆண்டிற்காக நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் |

| | | | |
|---|---|---|---|
| | இனங்காணப்பட்ட தவறை சீராக்கி மீளாய்வாண்டின் போது அச்சொத்துக்கள் கற்பசைன் சொத்தாக இனங்காணப்பட்டிருந்தது, எனினும் அச்சொத்துக்களின் நியாயமான பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் அதற்குப் பதிலாக ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் திரட்டிய பெறுமானத் தேய்வுக் கணக்கில் காணப்பட்ட மீதி ரூபா 1.15 மில்லியன் கற்பனை சொத்துக்கள் பெறுமானத் தேய்வு ஒதுக்கீட்டுக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது. | அறிவுறுத்தல்களின் பிரகாரம் சீராக்கம் செய்வதாக | போது இத்தவறு திருத்தம் செய்யப்பட வேண்டும். |
| (இ) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை Smokeless Tobacco Bloomberg (STB) செயற்திட்டத்திலிருந்து கிடைத்திருந்த ரூபா 18.32 மில்லியனான முலதன மானியக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் அதில் ரூபா 3.16 மில்லியன் மீண்டெழும் செலவினத்திற்காக செலவிடப்பட்டிருந்த போதும் அதற்கு சமமான பெறுமதியொன்று மீண்டெழும் வருமானமாக இனங்காணப்படாமை காரணமாக ஆண்டின் பற்றாக்குறை அப்பெறுமானத்தினால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | எதிர்வரும் காலங்களில் நிதிக்கூற்றுக்களில் கணக்காய்வினால் மேற்கொள்ளப்படும் தெரியப்படுத்தல்கள் மற்றும் அறிவுறுத்தல்களின் பிரகாரம் சீராக்கம் செய்வதாக | 2020 ஆம் ஆண்டிற்காக நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது இத்தவறு திருத்தம் செய்யப்பட வேண்டும். |

**1.5.4 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிபுணத்துவத்துடனும் தயாளத்தன்மையுடன் உயர்ந்த நோய் உதவி சேவைகளை வழங்கக்கூடிய சுய திருப்தியுடனான உள்ளக வைத்தியர்களை உருவாக்குவதன் மூலம் நோய் சிகிச்சைகளின் தரத்தையும் பாதுகாப்பினையும் மேம்படுத்தும் நோக்கில் சுகாதார ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க நிதியத்தினால் பயிற்சியில் உள்ள வைத்தியர்களுக்காக நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த | அதிகாரசபையின் நோக்கங்களுடன் இணைந்ததாக முன்மொழிவுகள் உள்ளடக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட கடிதத்திலுள்ள விடயங்கள் கருத்திற்கொள்ளப்பட்டு உரிய செயற்பாட்டிற்கு ஒத்துழைப்பு வழங்கியதாகவும் வேலைத்திட்டத்தின் பெயர் மாற்றப்படாமல் நிகழ்ச்சிகளை அதிகாரசபையின் வளவாளர்களின் விரிவுரைகள் மற்றும் ஒத்துழைப்புடன் | அதிகாரசபையின் நோக்கங்களுக்கு உட்படும் வகையில் பணிப்பாளர் சபையின் முன் அங்கீகாரத்துடன் நிகழ்ச்சிததிட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிகழ்ச்சியொன்றுக்காக புத்தகமொன்றை அச்சிட்டு தருமாறு அதிகாரசபையால் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது. அந்நிகழ்ச்சித்திட்டத்தை அதிகாரசபையின் நோக்கத்தின் கீழ் எடுக்க முடியாமல் இருந்த நிகழ்ச்சித்திட்டமொன்றாகும். எனினும் புகையிலை மற்றும் மதுசார தவிர்த்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பாக பயிலுனர் மருத்துவர்களின் இயலளவை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் என மாற்றப்பட்டு பணிப்பாளர் சபையின் அங்கீகாரமொன்று இல்லாமல் உலக சுகாதார அமைப்பினால் அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்த நிதியங்களில் இருந்து ரூபா 739,446 செலவிடப்பட்டு நடாத்தப்பட்டிருந்தது. | இடம்பெற்றதாகவும் எதிர்காலத்தில் அதிகாரசபையின் ஒத்துழைப்பு எதிர்பார்ப்பில் மேற்கொள்ளப்படும் இவ்வாறான நிகழ்ச்சித்திட்டங்களின் போது அதிகாரசபையின் நோக்கங்கள் தொடர்பான நேரடியான செயற்பாடுகள் மாத்திரம் பணிப்பாளர், சபையின் மூலம் அதிகாரத்தை பெற்றுக்கொண்டு ஒத்துழைப்பு வழங்குவதாகவும் | |
| (ஆ) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை Smokeless Tobacco Bloomberg (STB) செயற்திட்டத்திலிருந்து கிடைத்திருந்த ரூபா 18.32 மில்லியனாக இருந்ததுடன் செயற்படுத்துவதற்காக 3 நோக்கங்கள் இனங்காணப்பட்டிருந்தன. அந்நோக்கங்களுக்காக மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்த ரூபா 357,717 மாத்திரமாக இருந்தது. எனினும் அந்நோக்கங்களுக்கு புறம்பாகவும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் இல்லாமலும் பல்வேறு அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறவனங்களுக்கும் அமைப்புக்களாலும் நடாத்தப்பட்டிருந்த நிகழ்ச்சிகளுக்காக ரூபா 572,260 செலவிடப்பட்டிருந்தது, மேலும் செயற்திட்டத்திலிருந்து கிடைத்த மொத்த தொகையில் 17 சதவீதம் பதவியணி சம்பளம் மற்றும் படிகளுக்காக செலுத்த முடியுமான போதும் அதில் 38 சதவீதத்திற்கு சமமான ரூபா 7.03 மில்லியன் அதற்காக செலவிடப்பட்டிருந்தது. | அதிகாரசபையினால் செயற்பாடுகளை நிறைவேற்றும் போது பாதீடு செய்யப்பட் டநோக்கங்க்ள மற்றம் தொடர்புடைய செலவினங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அரசு உட்பட நிறுவனங்களிடமிருந்தும் ஒத்துழைப்பினை பெற்றுக் கொள்வதற்காக மேற்கொள்ளப்படும் வேண்டு கோள்களும் பணிப்பாளர் சபையின் கவனத்திற்கு கொண்டு வருவதற்கும் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுப்பதாகவும் | அதிகாரசபையின் நோக்கங்களுக்கு உட்படும் வகையில் பணிப்பாளர் சபையின் முன் அங்கீகாரத்துடன் நிகழ்ச்சிததிட்டங் கள் செயற்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | திறைசேரியின் அங்கீகாரமின்றியும் பணிபபாளர் சபையின் அங்கீகாரத்தின் பேரில் Smokeless Tobacco செயற்திட்டத்தின் கணக்கினை பேணுவதற்காக 2016 யூலை மாதத்திலிருந்து மாதமொன்றுக்கு ரூபா 10,000 வீதம் 37 மாதங்களுக்காக ரூபா 370,000 அதிகாரசபையின் கணக்காளருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. | திறைசேரியின் அங்கீகாரம் இல்லாமல் இவ்வாறான படிகள் கொடுப்பனவு செய்யக்கூடாது |

**1.5.5 கணக்காய்விற்கான ஆவணச்சான்றின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொதுச் சுகாதார பரிசோதகர்களிற்கான பயிற்சிப் பட்டறைகளை நடாத்துவதற்காகவும் போதைப்பொருளிற்கு அடிமையான அனுபவங்கள் தொடர்பான காணொளியைத் தயாரிப்பதற்கும் முறையான முகாமைத்துவமொன்றில்லாமல் செலவிடப்பட்ட ரூபா 67,525 மொத்த தொகையை சரிபார்ப்பதற்கு தேவையான ஆவணச்சான்றுகள் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை நடாத்துவதற்கு முன்னர் தொலைபேசி அழைப்பொன்றின் ஊடாக அல்லது எழுத்துமூலம் பங்குபற்றபவர்களின் வரவு அதிகாரசபையால் உறுதிப்படுத்தப்படுகின்ற போதிலும் போதியளவு பதவியணியினர் காணப்படாததன் காரணமாக அந்நிகழ்ச்சித்திட்டம் முறையாக முகாமை செய்யப்பட்டிருக்கவில்லை. இதனால் எதிர்காலத்தில் நடாத்தப்படும் நிசழ்ச்சித்திட்டங்கள் மீது அதிகாரசபையின் உரிய கவனம் முன்நிறுத்தப்படும். மேலும் போதைப்பொருளுக்கு அடிமையான அனுபவம் தொடர்பான காணொளி நாடாவிற்கு மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் போது கவனத்தில் எடுக்கப்பட்டிருக்காததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் காலக்கிரமத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதில் முறையான முகாமைத்துவத்துடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் உடன்படிக்கைகளின் பிரகாரம் ஒப்பந்தத்தை நிறைவேற்றுதல் மற்றும் ஒவ்வொரு கொடுப்பனவும் ஆவணச்சான்று மூலம் உறுதிப்படுத்தப் பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவக் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2006 இன் 27 ஆம் இலக்க புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகாரச்சட்டம் | | | |
| (i) | 3(1)(ஆ) பிரிவு | நீதி அமைச்சின் சிரேஷ்ட செயலாளரை விட உயர்ந்த தரநிலையை கொண்டுள்ள உத்தியோகத்தர் ஒருவர் அதிகாரசபையின் முகாமைத்துவ சபையின் உறுப்பினரொருவராக நியமனம் செய்யப்பட வேண்டிய போதிலும் 2020 மார்ச் 11 வரையிலும் அவ் உறுப்பினர் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ சபையின் உறுப்பினரொருவராக நீதி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளரை விட உயர்ந்த தரநிலையைக் கொண்டுள்ள நபரொருவரை நியமனம் செய்வது தொடர்பாக உரிய தரப்பினர்களுக்கு வேண்டுகோளொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. | அதிகாச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 22(2) ஆம் பிரிவு | திரட்டு நிதியத்திலிருந்தும் இலங்கையினுள் அல்லது வெளிநாட்டிலிருந்தும் பரிசுப்பொருட்கள், மானியங்கள் அல்லது அன்பளிப்புக்கள் மூலம் அதிகாரசபைக்கு பெறப்படுகின்ற அனைத்து தொகைகளும் அதிகாரசபையின் சார்பில் பேணப்படுகின்ற நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். எனினும் 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறு திரட்டு நிதியத்திலிருந்தும் வெளிநாட்டு மானியமாகவும் பெறப்பட்ட ரூபா 27.17 மில்லியன் தொகை அதிகாரசபையின் | திரட்டு நிதியத்திலிருந்தும் இலங்கையினுள் அல்லது வெளிநாட்டிலிருந்தும் பரிசுப்பொருட்கள், மானியங்கள் அல்லது அன்பளிப்புக்கள் மூலம் அதிகாரசபைக்கு பெறப்பட்ட அனைத்து தொகைகளும் காலக்கிரமத்தில் அதிகாரசபையின் நிதியத்திற்கு செலவு | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சார்பில் பேணப்பட்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்படாமல் மூலதன மானியக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | வைக்கப்படும். | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 625(3) மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட 2019 யூலை 25 ஆம் திகதிய எஸ்சீ&பிஎம்யூ/மானியம்/19 ஆம் இலக்க கடிதம் | உலக சுகாதார நிறுவனத்தால் வழங்கப்பட்ட ரூபா 8.23 மில்லியன் தொகையான மானியங்கள் அத்திணைக்களத்தின் இணக்கப்பாட்டுடன் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினூடாக பெறப்பட்டிருக்கவில்லை. | அதிகாரசபைக்கு பெறப்பட்ட வெளிநாட்டு மானியங்கள் திறைசேரியில் வைப்புச் செய்யப்படுவதுடன் நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் காலக்கிரமத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணங்கள் மற்றும் ஏனைய ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | ஜனாதிபதி செயலகத்தால் வழங்கப்பட்ட 2015 செப்தெம்பர் 15 ஆம் திகதிய எஸ்பி/எஸ்பீ/07/15 ஆம் இலக்க சுற்றறிக்கை | அரச நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப்பட்டறைகள் என்பன ஆடம்பர விடுதிகளில் மிகைப்படுத்தப்பட்ட கிரயங்களுடன் நடாத்தப்படக்கூடாத போதிலும் அச் சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக ஆடம்பர விடுதிகளில் கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப்பட்டறைகளை நடாத்துவதற்கு ரூபா 1.66 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. | சனாதிபதி செயலகத்தால் வழங்கப்பட்ட உரிய சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் மிகைப்படுத்தப்பட்ட கிரயங்களுடன் ஆடம்பர விடுதிகளில் அரச நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப்பட்டறைகளை நடாத்தாமல் இருப்பதற்கு காலக்கிரமத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| | (i) 5.2.3 ஆம் பிரிவு | 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பாதிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினக்கூற்று, அத்திகதியில் உள்ளவாறு பாதிடப்பட்ட | கணக்கீட்டு கிளையிலுள்ள அனைத்து நடவடிக்கைகளும் கணக்காளராலேயே முன்னைய சில | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் ஐந்தொகை என்பவற்றை உள்ளடக்கி மீளாய்வாண்டிற்கான பாதீடு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆண்டுகளிலிருந்து மேற்கொள்ளப்பட்டு வருவதால் கடமைகளை மேற்கொள்வதற்கு போதிய காலம் காணப்படவில்லை. சுற்றறிக்கையின் பிரகாரம் ஆண்டிற்கான பாதீட்டை தயாரித்து சமர்ப்பிப்பதற்கு தேவையான உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான நடவடிக்கை காலக்கிரமத்தில் எடுக்கப்படும். | |
| (ii) | 6.5.1 ஆம் பிரிவு | வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து அதிகாரசபையின் வரைவு ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பொது முகாமையாளரின் பதவியில் காணப்பட்ட வெற்றிடம் அதற்கான காரணமாகும். அத்துடன் உரிய பதவிக்கு நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. மேலும் வரைவு ஆண்டறிக்கை தாமதமின்றி வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து காலக்கிரமத்தில் சமர்ப்பிக்கப்படும். | -மேற்படி- |
| (உ) | 2015 மே 25 ஆம் திகதிய பிஈடி/1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.5 ஆம் பந்தி | உத்தியோகபூர்வமாக ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்கு அல்லது போக்குவரத்துப் படியொன்றுக்கு | தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்கள் காரணமாக தனியார் | சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உரித்துடைய உத்தியோகத்தர்கள் குழாம் வாகனம் உள்ளடங்கிய ஏனைய அலுவலக வாகனங்களை பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்காத போதிலும் அதிகாரசபையின் தலைவர் கடமை நோக்கங்களுக்காகவும் வீட்டிலிருந்தும் வீட்டிற்கும் பிரயாணம் செய்வதற்காகவும் அதிகாரசபைக்கு சொந்தமான மோட்டார் வாகனங்களை பயன்படுத்தி இருந்ததுடன் போக்குவரத்து மற்றும் எரிபொருள் படியையும் பெற்றிருந்தார். | மோட்டார் வாகனங்களை பயன்படுத்த முடியாதுள்ள சந்தர்ப்பங்களில் அலுவலக வாகனங்கள் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் போக்குவரத்து மற்றும் எரிபொருள் படிகளைப் பெறுகின்ற உத்தியோகத்தர் களுக்கு அலுவலக வாகனங்களை வழங்காது இருப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஊ) | 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | அதிகாரசபையின் நாளதுவரையாக்கப்பட்ட அமைப்புக் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளபடியான பதவியணிக்குரிய விபரங்கள், பாதீடு, பிரதான பெறுகைத் திட்டம், கட்டுநிதி தேவைப்பாட்டு திட்டம் மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் என்பன மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டம், அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளபடியான பதவியணிக்குரிய விபரங்கள், பாதீடு மற்றும் பிரதான பெறுகைத் திட்டம் என்பன ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்டு தேவையான அங்கீகாரங்களிற்காக தேசிய பாதீட்டுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேலும் உரிய அரச நிதிச் சுற்றிக்கையின் பிரகாரம் எதிர்வரும் ஆண்டுகளில் தகவல்களைச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 472,998 பற்றாக்குறையொன்றாக காணப்பட்டதுடன் ஒப்பிடும் போது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 11,581 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 484,579 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. ஊழியர் சம்பளங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக ஏற்பட்ட செலவினங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பன குறித்த முன்னேற்றத்திற்கான பிரதான காரணங்களாக காணப்பட்டன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| புகையிலைக்கு அடிமையாவதை ஒழிப்பதற்காக அதற்கு அடிமையானவர்களிற்கு உதவுவதை தடுப்பதுடன் ‘‘புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான உளவள ஆலோசனை 1948’’ இற்காக 2020 யூலை 31 அளவில் ரூபா 5.39 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. அத்துடன் காலத்திற்கு காலம் குறித்த சேவையை தொடரமுடியாததன் காரணமாக தொடர்ச்சியாக சேவையை வழங்க முடியாதிருந்தது. முறைமையில் உள்ள செயற்பாடற்ற நிலைமை, தொழில்நுட்ப பராமரிப்பு தொடர்பான சேவை உடன்படிக்கை நாளதுவரையாக்கப்படாதமை, மூலதன நிதி போதாமை மற்றும் காலத்திற்குக் காலம் உளவள ஆலோசனையாளர்கள் சேவையிலிருந்து நீங்குதல் என்பன சேவையை தொடர முடியாதமைக்கான காரணங்களாகும். | முறைமையில் உள்ள செயற்பாடற்ற நிலைமை, தொழில்நுட்ப பராமரிப்பு தொடர்பான சேவை உடன்படிக்கை புதுப்பிக்கப்படாமை, மூலதன நிதி போதாமை மற்றும் காலத்திற்கு காலம் உளவள ஆலோசனையாளர்கள் சேவையிலிருந்து நீங்குதல் என்பன குறித்த சேவையை தொடர முடியாமைக்கு தாக்கமளித்திருந்ததுடன் உளவள ஆலோசனை சேவையானது நாளதுவரையாக்கப்பட்ட முறையில் காலக்கிரமத்தில் பேணப்படும். | உளவள ஆலோசனை சேவையை செயற்திறனாக பயன்படுத்த முடியுமா என்பது தொடர்பான ஆய்வொன்றின் பின் உளவள ஆலோசனை சேவை செயற்படுத்தப்பட வேண்டும். |

### 3.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகாரசபையானது அதன் தொழிற்பாடுகளின் செயலாற்றலிற்காக 30 பதவிகளுடனான | அதிகாரசபையின் அதிக தொழிற்பாடுகளை முழுமையாக ஆற்றுவதற்கு அதிகாரசபையில் போதியளவு | அதிகாரசபையின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கும் |

| | | |
|---|---|---|
| பதவியணியொன்றின் தேவைப்பாட்டை இனங்கண்டிருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவற்றில் 14 பதவிகளுக்காக மாத்திரமே முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. எனினும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி 11 உத்தியோகத்தர்களை மாத்திரமே கொண்டிருந்ததுடன் போதியளவு பதவியணியினர் காணப்படாதமை அதிகாரசபையின் தொழிற்பாடுகளை முறையாக ஆற்றுவதற்கு தடையொன்றாக உள்ளது. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டிருக்காத பதவிகளுக்கு காலத்திற்கு காலம் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 25 உத்தியோகத்தர்களுடன் பதவியணிக்கான சம்பளங்கள் மற்றும் படிகளாக 2016 தொடக்கம் 2019 வரையான நான்கு ஆண்டு காலப்பகுதியின் போது ரூபா 12,307,324 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | பதவியணியினர் காணப்படவில்லை. புதிய பணிப்பாளர் சபையின் அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டல்களின் கீழ் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்கு ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் பதவியணிக்கான அங்கீகாரங்களை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் மாத்திரம் ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ளுதல் என்பன காலக்கிரமத்தில் மேற்கொள்ளப்படும். | தொழிற்பாடுகளை ஆற்றுவதற்கும் அங்கீகாரத்தைப் பெற்று போதியளவான பதவியணியினரை ஆட்சேர்ப்பு செய்வதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பு மற்றும் நல்லாளுகை

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டுகள் மற்றும் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டங்களில் உள்ளடக்கப்பட்ட புகையிலை மற்றும் மதுசாரத்தின் வரி தொடர்பான சூத்திரம் ஒன்றை வடிவமைத்தல், அதிகாரசட்டத்தை அமுல்படுத்துகின்ற சுங்க அலுவலர்கள், மதுவரி உத்தியோகத்தர்களுக்கான தெளிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல், படங்கள் | தொடர்ந்துவரும் ஆண்டுகளின் போது மதுசாரத்தின் வரி தொடர்பான சூத்திரம் வடிவமைக்கப்படுவதுடன் மதுவரி உத்தியோகத்தர்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு பட்டியலிடப்பட்டுள்ளது. மேலும் படங்கள் மூலமான சுகாதார எச்சரிக்கைகளை அமுல்படுத்துதல் தொடர்பான காலாண்டு அறிக்கைகள் பொது சுகாதார பரிசோதகர் ஊடாக பெறப்பட உள்ளதுடன் அவ்வாறு | அதிகாரசபைக்குச் சொந்தமான பௌதீக மற்றும் மனித வளங்களை அடிப்படையாகக் கொண்டு செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியதுடன் திட்டமிட்டவாறு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மூலமான எச்சரிக்கைகள், ஆண்டறிக்கையை வெளியிடுதல், ஊடகக் கொள்கைகளை மீறிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல் மற்றும் தனி சிகரட்டுக்கள் மீதான கொள்கைகளை (Policy on Single Cigarettes) அமுல்ப்படுத்துதல் ஆகிய ஆறு நடவடிக்கைகள் 2020 யூலை 28 வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு செயன்முன்னேற்றத்தை மீளாய்வு செய்வது அவசியமாக காணப்பட்ட போதிலும் பதவியணி போதாமை காரணமாக அதற்கிணங்க இதனை மேற்கொள்ள முடியாதுள்ளது. | |
| (ஆ) | மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயன்முன்னேற்ற அறிக்கைகளில் நிதி செயன்முன்னேற்றம் மாத்திரமே காட்டப்பட்டுள்ள அதே நேரம் பௌதீக செயன்முன்னேற்றம் காட்டப்பட்டிருக்கவில்லை. | போதியளவு பதவியணியினர் காணப்படாதமை காரணமாக பௌதீக செயன்முன்னேற்றத்தை அறிக்கையிட முடியாதிருந்ததுடன் பொது முகாமையாளர் பதவியில் காணப்பட்ட வெற்றிடம் காரணமாக தேவையான வழிகாட்டல்கள் மற்றும் அறிவுறுத்தல்களை வழங்கி விசேடமாக செயன்முன்னேற்றத்தை மீளாய்வு செய்ய முடியாதிருந்தது. மேலும் தேவையான ஆகக்குறைந்த பதவியணியினரை ஆட்சேர்ப்பு செய்வதன் மூலம் காலக்கிரமத்தில் அதிகாரசபையின் நெறிப்படுத்தல் விவகாரங்களில் முகாமைத்துவ சபையின் விசேட கவனம் செலுத்தப்படுகின்றது. | நிதி மற்றும் பௌதீக செயன்முன்னேற்றம் செயலாற்றல் அறிக்கைகளில் காட்டப்பட வேண்டும். |

## 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகாரசபையின் மீளாய்வாண்டிற்கான செயற்பாடுகள் மீது உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2018 ஆம் ஆண்டின் பின்னர் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் சுகாதார அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் ஊடாக உள்ளகக் கணக்காய்வொன்றை மேற்கொள்வது தொடர்பாக | உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | எழுத்து மூலமான வேண்டுகோளொன்று 2020 யூலை 13 இல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | |

**4.3 கணக்காய்வுக் குழுக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் 4 கூட்டங்கள் ஆண்டின் போது நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்காக ஒரு கூட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. | குழுவிற்கு நியமனம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் ஓய்வுபெற்றுச் சென்றமை மற்றும் 2019 ஒக்தோபர் மாதத்தின் பின்னர் பணிப்பாளர் சபை கலைக்கப்பட்டமை காரணமாக குழுக் கூட்டங்களை நடாத்த முடியாதிருந்தது. மேலும் சுகாதார அமைச்சின் அங்கீகாரம் மீது நடப்பாண்டிற்கான குழு உறுப்பினர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் சுற்றறிக்கைகளின் பிரகாரம் கூட்டங்கள் காலக்கிரமத்தில் நடாத்தப்படும். | சுற்றறிக்கைக்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |